இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 79 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 11 – திங்கள்கிழமை 28 அக்டோபர் 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 79 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 11 - Monday 28 October 2024 - Chennai 12 Pages ₹ 5.00



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட “என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டியில், வெற்றி பெற்ற பேச்சாளர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சியில், கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுடன், நேற்று (27.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயம், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் சிலைகள் முன்பு பேச்சாளர்கள் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்வின்போது, கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வனத் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் உடனிருந்தனர்.

## இளம் பேச்சாளர்கள்தான்

# திராவிட இயக்கத்தின் எதிர்காலத் தலைமுறை!

## இளைஞர் அணியின் ‘என் உயிரினும் மேலான...!’ பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, அக். 28-**

**இங்கிருப்பவர்கள் பேச்சாளர்கள் மட்டும் அல்ல, இவர்கள்தான் திராவிட இயக்கத்தின் எதிர்காலத் தலைமுறை திராவிட இயக்கம் இளைஞர்களால் - இளைஞர்களுக்காகத் தொடங்கப்பட்ட இளைஞர் இயக்கம்! நவீன யுகத்தின் புதிய பேச்சுப் போராளிகளான உங்களை, வருக... வருக என்று வரவேற்கிறேன் என்று கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.**

கழக இளைஞரணி சார்பில் – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட ‘என் உயிரினும் மேலான’ மாநில அளவிலான பேச்சுப் போட்டியின் பரிசளிப்பு விழா நேற்று (27.10.2024) முற்பகல் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

‘என் உயிரினும் மேலான’ இந்த நிகழ்ச்சியை பார்க்கும்போது, நான் அளவில்லாத வகையில் பெருமை அடைந்திருக்கிறேன்! இந்தப் பேச்சு போட்டி, மூன்று வெற்றியாளர்களைத் தேர்வு செய்வதற்காக நடைபெற்ற போட்டி மட்டும் அல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தியலை, அடுத்த நூற்றாண்டுக்குத் தூக்கிச் சுமந்து செல்லவிருக்கும் பேச்சுப் போராளிகளைக் கண்டறிந்து, பட்டை தீட்டும் பயிற்சிப் பட்டறை! அப்படிப்பட்ட பட்டறையை, நான் கட்டியெழுப்பிய இளைஞரணி நடத்திக் கொண்டிருக்கிறது என்பது தான், என் பெருமைக்குக் காரணம்!

**மூடநம்பிக்கைக்கு எதிராகப் பேசினோம்!**

“திராவிட முன்னேற்றக் கழகம் என்பதே, பேசிப் பேசி வளர்ந்த கழகம்! அந்தக் காலத்தில், பேசிப் பேசியே ஆட்சியை பிடித்த இயக்கம்” என்று நம்முடைய இயக்கத்தைப் பற்றிச் சொல்லுவார்கள். ஆனால், அவர்கள் சொல்ல மறந்தது, இல்லை சொல்லாமல் தவிர்ப்பது என்னவென்றால், நாம் பேசிய பேச்செல்லாம் வெறும் அலங்கார அடுக்குமொழி அல்ல, உலகம் முழுவதும் நடந்த புரட்சி வரலாறுகளைப் பேசினோம்; உலக அறிஞர்களின் வரலாற்றைப் பேசினோம்; நம் நாட்டில் நடைமுறையில் இருந்த கொடுமைகளைப் பேசினோம்; மூடநம்பிக்கை - பிற்போக்குத்தனம் பெண்ணடிமைத்தனம் இவைகளுக்கு எதிராகப் பேசினோம்.



ரத்தம் கக்கிய நிலையிலும் இந்தச் சமூகத்தின் இழிவு நீங்கப் பேசினார் அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள்! 95 வயதிலும் மூத்திரவாளியைச் சுமந்து கொண்டு, வலியைத் தாங்க முடியாத அளவிற்குப் பேசியவர் தந்தை பெரியார் அவர்கள்! சாக்ரடீஸ், தமிழர்கள் மீதான டெல்லியின் பாரபட்சம் என்று அனைத்து தலைப்பு களிலும் மடைதிறந்த வெள்ளம்போல் பேசினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்! அண்ணா பரம்பரை என்றே சொல்லும் அளவிற்கு இன்றைக்கு வரைக்கும், அண்ணா உருவாக்கிய மேடைத்தமிழ் பரம்பரையைச் சேர்ந்த பேச்சாளர்கள் இருக்கிறார்கள்.

**அறிவார்ந்த கருத்துக்களால் வளர்ந்த இயக்கம்**

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், திருக்குறள் என்று பழந்தமிழ் இலக்கியங்களை அழகுதமிழில் பாமர மக்களுக்கும் கொண்டு சென்றார் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். சமீபத்தில் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தலைவர் கலைஞர் ராஜா ராணி படத்தில் எழுதிய வசனத்தை ஒரு போட்டியாளர் பேச, அது சமூக வலைத்தளங்களில் வைரல் ஆனது! அந்தப் படத்தில் சாக்ரடீஸ் ஓரங்கநாடகத்தில் நம் இயக்கம் அடுக்குமொழியால் வளர்ந்தது அல்ல; அறிவார்ந்த கருத்துகளால் வளர்ந்த இயக்கம் என்று தலைவர் கலைஞர் எழுதி இருப்பார்! நாவலர் பேராசிரியர் சொல்லின் செல்வர் சிந்தனைச் சிற்பி - தத்துவமேதை என்று நம் இயக்கத்தில் இருக்கும் தலைவர்களின் பெயர்களே, அவர்கள் எப்படிபட்ட ஆற்றல்மிக்க பேச்சாளர்களாக இருந்தார்கள் என்று சொல்லும்!

பேச்சுக்கலை மிக மிக வீரியமிக்கது! சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது! “சொல்வன்மை மிக்கவனை வெல்வது அரிது” என்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட நிலையில் நடந்த இளைஞர் அணியின் பேச்சுப்போட்டியில்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## நான் வைக்கும் ஒவ்வொரு ‘டெஸ்டிலும் செண்ட்டம் ஸ்கோர்’ எடுக்கிறார் உதயநிதி ஸ்டாலின்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சொ**ல்வன்மைமிக்க படைக்கலன்களை உருவாக்க வேண்டும் என்றுதான், இந்த ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப் போட்டியை நடத்தும் பொறுப்பை இளைஞர் அணியிடம் நான் ஒப்படைத்தேன்.

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்” – என்கிறார் வள்ளுவர்.

அப்படித்தான், இளைஞரணிச் செயலாளர் பொறுப்பை தம்பி உதயநிதியிடம் நான் ஒப்படைத்தேன். இளைஞரணிச் செயலாளர் என்பது பதவி கிடையாது. அது பெரும் பொறுப்பு. அந்தப் பொறுப்பை உணர்ந்து, அவர் செயல்பட்டு வருகிறார். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், என்னைப் பொருத்தவரையில், அந்த பொறுப்பு நான் அவருக்கு கொடுத்த பயிற்சி! அப்படி பார்க்கும்போது, நான் வைக்கும் ஒவ்வொரு ‘டெஸ்ட்’லயும் அவர் ‘செண்ட்டம் ஸ்கோர்’ எடுக்கிறார்...

2019இல் ஊராட்சி சபைக் கூட்டங்கள் தொடங்கி, அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிரான பல்வேறு போராட்டங்கள் நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கம் - கொரோனா காலத்தில் உதவிகள் - நீர்நிலைகளைத் தூர்வாரும் பணிகள் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள் - நூலகங்கள் முரசொலியில் பாசறைப் பக்கம் - “முத்தமிழறிஞர் பதிப்பகம்” தொடங்கி கொள்கைப் புத்தகங்கள் என்று ஏராளமான பணிகளைச் செய்து வருகிறார். அதுமட்டுமல்ல, இளைஞரணியின் ஆற்றலை வெளிப்படுத்துவதுபோல் சேலத்தில் இளைஞரணி மாநாட்டை நடத்திக் காட்டினார்! சுமார் 6 லட்சம் இளைஞர்கள் கூடிய அந்த மாநாட்டில் நான் பேசும்போது, “இந்த இயக்கத்துக்கு 100 ஆண்டுகளுக்கான போர் வீரர்கள் தயாராகிவிட்டார்கள்” என்று சொன்னேன். அந்த களப்போர் வீரர்களுக்குத் துணை நிற்கும் சொற்போர் வீரர்களை அடையாளம் காணும் முன்னெடுப்புதான் இது! இந்த முன்னெடுப்பு மூலமாக, அடையாளம் காணப்பட்டிருக்கும் உங்களால் கழகம் வளர்ச்சி அடையும்! நம்முடைய தமிழ்நாடும் மேன்மையடையும்! திராவிட இயக்கம் வளர வேண்டும்! திராவிட முன்னேற்றக் கழகத்தால் தமிழ்நாடு வளர வேண்டும்! இதுதான் நம் இலட்சியம்! அந்த இலட்சியப் பாதையில், கழக இளைஞரணி வேகமாக நடைபோடுகிறது! அதற்குத் தம்பி உதயநிதிக்கும் - அவருக்குத் துணை நிற்கும் அத்தனை தம்பிமார்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்! பாராட்டுகள்!

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத்தின் பல்வேறு சார்பு அணிகளுக்கும் பல்வேறு பணிகளை நான் வழங்கி இருந்தேன். அதில், இளைஞரணிக்கு வழங்கப்பட்ட கடமைதான், கழகத்துக்காக 100 பேச்சாளர்களைத் தேர்வு செய்யும் மாபெரும் பணி! இளைஞரணியுடன் - கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியும் இணைந்து இந்தப் போட்டியைச் சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தியிருக்கிறார்கள்... 17 ஆயிரம் பேர் 78 நடுவர்கள் மாவட்ட அளவில் தேர்வானவர்களுக்கு மண்டல வாரியாகப் போட்டிகள் - இன்று வெற்றியாளர்களுக்கு பரிசளிப்பு என்று மிகப் பிரமாண்டமாக நடத்தியிருக்கிறார்கள்! நான் கேட்டது 100 பேச்சாளர்கள்! ஆனால், இப்போது 182 பேச்சாளர்களை அடையாளம் கண்டிருக்கிறார் தம்பி உதயநிதி அவர்கள்!



**(இளைஞர் அணி நடத்திய பேச்சுப்போட்டி பரிசளிப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை - 27.10.2024)**